சென்னை நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் நேற்று (29.03.2025) நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு.வி.க சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மண்டல இணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) இர.தேவேந்திரன், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையம் துணை இயக்குனர் திருமதி ம.மகேஸ்வரி, நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. ஜோதி வெங்கடேஸ்வரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று (29.03.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் "தொல்குடி புத்தாய்வு திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் கல்வியாண்டில் பழங்குடியினர் வாழ்வியல் குறித்து சிறப்பாக ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொண்ட இளங்கலை, முதுகலை மாணவர்கள் மற்றும் முனைவர், முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் செயலாளர் திருமதி ஆர். உமா மகேஸ்வரி, பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் திரு.ச.அண்ணாதுரை, ம.தொ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் பகுதியில் - மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் - உத்திரமேரூர் க.சுந்தர் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச்.30- சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் (28.3.2025) கேள்வி நேரத்தின்போது பேசிய உத்திர மேரூர் தொகுதி கழக எம். எல்.ஏ., க.சுந்தர், "மதுராந்தகம் பகுதியில் - மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைத்திட வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-

க.சுந்தர்: மதுராந்தகம் பகுதியிலே ஒரு கூடுதல் நீதிமன்றம், அது மதுராந்தகம், செய்யூர் இரண்டு நீதிமன்றங்களுக்கானது. ஆகவே, அதை ஏற்கெனவே, அங்கு போதிய இடவசதியெல்லாம் இருக்கின்றது. எனவே, அங்கே மதுராந்தகம் பகுதியிலே ஒரு மாவட்டக் கூடுதல் நீதிமன்றம் அமைக்க அமைச்சர் முன்வருவாரா?

எஸ். ரகுபதி: எல்லா இடங்களிலுமே மாவட்டக் கூடுதல் நீதிமன்றங்கள் அமைப்பது என்பது சாத்தியக்கூறுகள் கிடையாது. ஒரு காலத்திலே, மாவட்டத் தலைநகரங்களிலே இருந்தது, இப்பொழுது மாவட்டக் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் என்பது அங்கு இருக்கக்கூடிய பக்கத்தில் இருக்கக்கூடிய பொது வழக்காடிகளுடைய நலனுக்காகவும், நன்மைக்காகவும் வழக்கறிஞர்களுடைய நன்மைக்காகவும் ஒரு 20, 30, 40 கிலோ மீட்டர் தொலைவிலே இன்னொரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் வழக்குகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஆராயப்பட்டு, உயர் நீதிமன்றம் அதற்கு ஒப்புதல் தந்து அதற்குப்பிறகு அரசினுடைய நிதிநிலைக்கேற்ப அவைகளெல்லாம் இன்றைக்கு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மதுராந்தகத்திலே தற்பொழுது காஞ்சிபுரத்திலும், இருக்கிறது. செங்கல்பட்டிலும் மாவட்ட நீதிமன்றங்கள் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தாலே தற்போதைக்கு எந்தவிதமான வாய்ப்பும் கிடையாது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வேலூர் தொகுதி ஆரணி ரோட்டில் அமைந்துள்ள

திரௌபதி அம்மன் கோயில் திருப்பணிக்கு நிதி ஒதுக்கிட வேண்டும்!

சட்டப் பேரவையில் ப.கார்த்திகேயன் கோரிக்கை!

சென்னை, மார்ச். 30- சட்டப் பேரவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன், வேலூர் தொகுதி ஆரணி ரோட்டில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோயில் திருப்பணிக்கு நிதி ஒதுக்கித் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

ப.கார்த்திகேயன்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். என்னுடைய வேலூர் தொகுதி, ஆரணி roadல் அமைந்திருக்கின்ற திரௌபதி அம்மன் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டும். அக்கோயில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சாலைகள் develope செய்யப்பட்ட காரணத்தால், திரௌபதி அம்மன் கோயில் 8 அடி, 9 அடி பள்ளத்திற்குச் சென்று விட்டது. அக்கோயிலுக்கு ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் கருங்கல் திருப்பணிகள் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள், திருப்பணிக்கான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய நிதி, அந்த மண்டலத்தினுடைய இணையாளர் பரிந்துரையோடு ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுமானால் உடனடியாக அதற்குண்டான நிதியை ஒதுக்கித் தருவதோடு மட்டுமல்லாமல், Lifting முறையை இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னர், இதுவரையில் 9 திருக்கோயில்களில் வெற்றிகரமாக முடித்திருக்கிறோம். நம்முடைய பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் சேகர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ரவீஸ்வரர் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோயிலுக்கு, சூரிய ஒளி நேராக ஈஸ்வரன் மீது படுகின்ற அந்த திருக்கோயிலுக்கு Lifting முறையில், 8 அடி பள்ளத்திலிருந்த திருக்கோயிலை தற்போது திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரைமட்டத்திற்கு அந்தத் திருக்கோயிலை உயர்த்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் நீங்கள் கோரிய திருக்கோயிலுக்கு சம்பந்தப்பட்ட technicians அனுப்பி பரிசோதிக்கச் சொல்கிறோம். Lifting முறையே பயன்படுத்தப்பட முடியும் என்றால், அதற்குச் செலவும் குறைவாக இருக்கும். அதற்குண்டான ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் கோரிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

விருகம்பாக்கம் - எம்.ஜி.ஆர். நகரில் - மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைத்திடுவீர்!

விருகம்பாக்கம் பகுதியில் - இரண்டு 110 K.V. துணை மின் நிலையங்கள் தேவை!

சட்டப் பேரவையில் - ஏ.எம்.வி.பிரபாகர ராஜா வலியுறுத்தல்!

சென்னை,மார்ச். 30- சட்டப் பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

ஏ.எம்.வி. பிரபாகரராஜா: விருகம்பாக்கம் தொகுதி, 138-வது வார்டு, எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளில் உள்ள மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர்: வி. செந்தில்பாலாஜி : சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், ஐந்து கோட்டங்களில் உயர் தாழ் வழுத்த மின் கம்பிகள், புதைவடங்களாக மாற்றப்பட்டுள்ளது. கே.கே.நகர், வியாசர்பாடி மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய மூன்று கோட்டங்களில் மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, KfW நிதி நிறுவத்தினுடைய, நிதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளன. நிதி அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் விருகம்பாக்கம் தொகுதி, 138 வார்டு எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதிகளில் புதைவடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ.எம்.வி. பிரபாகரராஜா: விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 138, எம்.ஜி.ஆர். நகரைப் பொறுத்தவரையில், அனைத்துத் தெருக்களும் மிகக் குறுகிய தெருக்களாக இருக்கும்; 18 அடி, 15 அடி தெருக்களாக இருக்கும். ஆகவே, அங்கு செல்லக்கூடிய உயர்நிலை மின் கம்பிகள் ஒரு சில இடங்களில் மக்களுக்கு ஆபத்தாக இருக்கிறது. குறிப்பாக முல்லைத் தெரு, அன்னை சத்யா நகர், பாரதியார் தெரு போன்ற இடங்களிலும், 44 தெருக்களிலும் அமைச்சர் விரைந்து புதைவட மின் கம்பிகளை அமைத்துத் தருவாரா?

மேலும், வார்டு எண்கள் 127, 128, 129, 136, 137 ஆகிய வார்டுகளுக்கும் உடனடியாக புதைவட மின் கம்பிகளை அமைத்துத் தருவாரா ?

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: விருகம்பாக்கம் தொகுதி மட்டுமல்ல, சென்னை மாநகராட்சியில் விடுபட்ட அனைத்து பகுதிகளுக்குமே விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. நிதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது; நிதிக்கு அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.எம்.வி. பிரபாகரராஜா: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு பருவமழைக் காலங்களிலும், மழை பொழியும்போது, pillar box-ல் ஒரு அடிக்குத் தண்ணீர்வரும்; அந்நேரங்களில் மக்களின் நலன் கருதி மின்சாரத் துறை அதிகாரிகள் மின்சாரத்தைத் துண்டிப்பது வழக்கமாக உள்ளது. நம் திராவிட நாயகர், முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு, மழைக் காலங்களில்,

pillar box-ஐ இரண்டடி height-க்கு உயர்த்தி, எங்கள் தொகுதியில் பல்வேறு இடங்களில் மழை பொழியும்போதே தடையில்லா மின்சாரம் வழங்கிய அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் , விடுபட்ட பல்வேறு பகுதிகளில் pillar box-ஐ உயர்த்தித் தருவாரா என்று கேட்டுக் கொண்டு, மேலும், விருகம்பாக்கம், கலைஞர் நகர், சாலிகிராமம், கோயம்பேடு, நெசப்பாக்கம் வளர்ந்து வரக்கூடிய பகுதிகளாக உள்ளன. அங்கு ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதிகளில் இரண்டு 110KV துணை மின் நிலையங்களை அமைச்சர் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், மழைக் காலங்களில் பாதிப்பு ஏற்படும்போது, எந்தவித பாதிப்பும் இல்லாமல் சீரான மின் விநியோகம் செய்வதற்காக pillar box ஒரு மீட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. விடுபட்ட பகுதிகளில், இந்த ஆண்டே அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாநகராட்சிப் பகுதிகள் முழுவதுமாக pillar box ஒரு மீட்டர் அளவுக்கு உயர்த்தித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், விருகம்பாக்கம் தொகுதியில் 238 RMU (Ring Main Unit) புதியதாக நிறுவப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அங்கே 5 துணை மின் நிலையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் , இரண்டு துணை மின் நிலையங்கள் கோரியிருக்கிறார். அதை அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

முதல் கட்டமாக

10 தொகுதிகளில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் பணிகள்!

விரைந்து எடுக்கப்படும் என - சட்டப் பேரவையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 30- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அளித்த பதில்கள் வருமாறு:-

ஏ.ஆர்.ஆர். ரகுராமன்: (அ) சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, 7வது வார்டில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர்: வி.செந்தில் பாலாஜி: சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி 7வது வார்டில் தனி மின்மாற்றி அமைத்து 2024 ஆம் ஆண்டில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாத்தூர் தொகுதிக்கு என்று செயற்பொறியாளர் அலுவலகம் இல்லை என்ற நான் சட்டப்பேரவையில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், 64 தொகுதிகளுக்கு செயற்பொறியாளர் அலுவலகம் இல்லை என்று கண்டறியப்பட்டு, முதல் கட்டமாக 10 தொகுதிகளுக்கு செயற்பொறியாளர் அலுவலகம் ஒதுக்கப்பட்டது, அதில் சாத்தூரும் ஒன்று. எனவே, இந்த செயற்பொறியாளர் அலுவலக பணிகள் எப்போது முடியும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, சாத்தூர் நகரத்திற்கு இருவழிச்சாலை மின்பாதை அமைத்துத்தரும்படி, வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: செயற்பொறியாளர் அலுவலகம் இந்த மாதத்தினுடைய இறுதியிலிருந்து பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர் அவர்கள் இருவழி மின்பாதையை கேட்டிருக்கின்றார். துறையின் சார்பாக ஆய்வு செய்யப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல 2,366 புதிய மின்மாற்றிகள் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் சாத்தூர் தொகுதியில் மட்டும் 265 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மீதம் ஏதேனும் தேவைப்பட்டால் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, அதையும் அமைத்துத் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏ.ஆர்.ஆர். ரகுராமன்: மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இருவழி மின்பாதையை இந்த ஆண்டு நீங்கள் செய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இந்த ஆண்டு, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு தேவையெற்படின் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கு.மரகதம் குமரவேல்: எனது மதுராந்தகம் தொகுதியில், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் எல். எண்டத்தூரில் எப்போது துணை மின் நிலையப்பணிகள் தொடங்கும் என்று அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்பு கின்றேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: இந்த ஆண்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெ.சு.தி. சரவணன்: கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலசப்பாக்கத்தில் இயங்கி வரும், உதவி கோட்ட பொறியாளர் மின் அலுவலகம், ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது அந்தக் கட்டடத்தின் உரிமையாளர், அந்த அலுவலகத்தை காலி செய்ய வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன். நாங்கள் இடம் கொடுப்பதற்கு தயாராக உள்ளோம். வட்டாட்சியர் மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கான proposal அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: என்னுடைய துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களை சந்தித்து, அதற்கான இடத்தை தேர்வு செய்து, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்லூர் கே.ராஜு: அமைச்சர் அவர்கள், மதுரை (மேற்கு) தொகுதியில், பெத்தானியாபுரத்தில் இரண்டு தெருக்கள் வழியாக 110kv, தாழ்ந்த நிலையில், கை எட்டும் தூரத்தில் மின் வழித்தடம் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் அதிலும் நான் கொடுத்திருந்தேன். இப்போது ரூ.3¼ கோடி அளவிற்கு, அதற்கான estimate போட்டிருக்கிறார்கள். அது எப்போது நிறைவேற்றப்படும், இரண்டு ஆண்டுகளாக அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அதை முடித்துக்கொடுப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய உயிரிழப்பு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: மதுரை (மேற்கு) தொகுதியில் 218 புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல 3 புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகளும், துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும், இந்த ஆண்டு அதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் அதற்கான பணிகள் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பதிலளித்தார்.

100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கண்டன உரையாற்றினார்! அ.ம.துரைவீரமணி தலைமை!

சென்னை, மார்ச். 30 சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் ஆலோசனைப்படி, நேற்று (29.03.2025 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு, அயப்பாக்கம் வாட்டர் டேங்க் அருகில் நடைபெற்றது.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம. துரைவீரமணி தலைமையில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.பி.அருண் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கண்டன உரை ஆற்றினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நோளம்பூர் வே.ராஜன் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம், பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் எஸ்.பத்மபிரியா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. வினோத்,

தொ.மு.ச. பேரவை சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் நா.தனசேகரன், மதுரவாயல் தெற்கு மற்றும் வடக்கு பகுதிக் கழக வட்டச் செயலாளர்கள், வில்லிவாக்கம் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர் கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளாட்சி கழக உடன் பிறப்புகள் அலை கடலென திரண்டனர்.

தலைமை: கழக த.ரமேஷ்! சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில்

முதல்வர் பிறந்த நாள் விழா! மாபெரும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர் - சிவ.வீ.மெய்யநாதன் - மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, மார்ச்.30- சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. நெசவாளர் அணி சார்பில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (30-03-2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு வேளச்சேரி எம். ஜி. ஆர் நகர் 11வது தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த. ரமேஷ் தலைமை வகிக்கிறார்.

அரிமா சேகர் ப.செ, வே. ஆனந்தம் எம்.சி., பெ.மணிமாறன், எஸ்.பாஸ்கரன் எம்.சி., மகேஷ்வரி முருகவேல் எம்.சி., த.ஜெகதீசன், முகேஷ் கண்ணா, கே.என்.தாமோதரன், ஆர்.கே. குட்டி பிரபு போஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

எல்லப்பன்,சம்பந்தம், நடராசன், நரேஷ் குமார், கருணாநிதி,மோகன்தாஸ், ரகு, வெங்கடேசன், செந்தில் குமார், செல்வம், நந்தகுமார், கோடீஸ்வரன், சீனிவாசன், மன்மதராஜ், மதன் ராஜ், ரவி கேசவன், ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஆவடி சா.மு. நாசர் (சிறுபான்மை மற்றும் வெளிநாட்டு மக்கள் நலத்துறை அமைச்சர்), சிவ வீ. மெய்யநாதன் (பிற்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்), சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்ரமணியம் ஆகியோர் சிறப்புரை ஆற்றி நலதிட்ட உதவிகள் வழங்குகிறார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அசன் மௌளானா எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., க.கணபதி எம்.எல்.ஏ., ஏஎம்வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எம்.ராஜசேகர், ஏ.பி. பிஜீ, எம்.சச்சிதானந்தம், பி.செல்வக்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.